**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையெல்லாம் இங்கே படிக்க முடியாது. அதையெல்லாம் படிக்க முடியாது. என்னுடைய அறையில் வந்து கொடுத்துவிட்டீர்கள். என்னுடைய ஆய்விலுள்ள பொருள் குறித்துப் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது.

[2017 பிப்ரவரி 18

**திரு. S. செம்மலை:** **

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொருவருக்கும் நான் பதில் சொல்லிக்கொண்டிருந்தால், அவையை எப்படி நடத்துவது?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சலிட்டனர்.)

செயலாளர் குறித்தெல்லாம் நீங்கள் பேசாதீர்கள்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை, உங்களுக்குப் பாதுகாப்பிலே ஏதோ குறைபாடு இருக்கிறதென்று சொன்னீர்கள். அதற்காகத்தான் நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் என்னிடத்திலே அதுகுறித்து உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் அனுமதிக்காமல், அதைப்பற்றி பேசக்கூடாது. வேறு புது செய்தி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை, உங்களுக்கு விதிகள் நன்றாகத் தெரியும். என்னுடைய ஆய்விலுள்ள பொருள் குறித்து நீங்கள் பேசக்கூடாது. நீங்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய ஆய்விலுள்ள பொருள் குறித்து நீங்கள் பேசவேண்டாம். புது செய்திகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்; நான் என்னவென்று கேட்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 பிப்ரவரி 18]

முற்பகல் 11–20

**திரு. S. செம்மலை:** புது செய்திகள். இந்த நிலை எனக்கு மட்டுமல்ல. பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் அவர்களுடைய தொகுதிக்குச் செல்ல முடியாத அளவிற்குத் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதெல்லாம் தேவை இல்லை இதெல்லாம் உரிமை மீறலில் வராது. உட்காருங்கள் நீங்கள், உட்காருங்கள். இதெல்லாம் என்ன? உட்காருங்கள். இதை விவாதமாகச் செய்தால் என்ன அர்த்தம்?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

நீங்கள்கூட இதற்கெல்லாம் support செய்கின்றீர்களே, உட்காருங்கள். உட்காருங்கள், தயவுசெய்து உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகின்றேன், உட்காருங்கள். திரு. செம்மலை அவர்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கின்றேன். அவர் அதை விட்டுவிட்டு, வேறு எதையோ பேசிக்கொண்டிருந்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்? பாதுகாப்புத் தருகின்றேன், அதை மட்டும் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, நீங்கள் வேறு அரசியல் பேசினால், அதற்கு நான் எப்படிப் பொறுப்பு? திரு. செம்மலை, பேசுங்கள்.

**திரு. S. செம்மலை:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செம்மலை, நான் சொல்வதைக் கேளுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு உறுப்பினர் செம்மலை, நீங்கள் பாதுகாப்பு குறித்து என்னிடத்தில் கேட்கின்றேன் என்று சொல்லிவிட்டு, வெளியில் நடந்த விஷயத்தைப்பற்றி சொன்னால் எப்படி? எனக்கு எந்த complaint–ம் வரவில்லை, வராத விஷயத்தைப் பற்றியெல்லாம் நீங்கள் raise பண்ணினால், நான் அதற்குப் பதில் சொல்ல முடியாது. அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். நீங்கள் சொன்னதையெல்லாம் நான் பொறுமையாகக் கேட்டுக்கொண்டேன். உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 பிப்ரவரி 18

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. ஆஸ்டின். என்ன வேண்டுமானாலும் பேச முடியாது. பாதுகாப்பு குறித்து என்னிடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் கேட்டிருக்கின்றார்கள். அதற்கு நான் உரிய நடவடிக்கை எடுக்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றேன். திரு. செம்மலை ஓர் உரிமை மீறல் பிரச்சினைக் குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. அதற்கு மேலும் புதியதாக சில விஷயங்களைச் சொல்கின்றேன் என்று சொன்னார். அதற்கு நான் அனுமதி அளித்தேன். அந்த விஷயங்களை மட்டும் சொன்னால் போதும்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன். எனக்காக மட்டும் நான் வாதாடவில்லை. ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துச் சொல்கின்றேன். அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சுதந்திரமாகத் தங்களுடைய தொகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு வழங்க வேண்டும். யாருடைய control–லிலும், யாருடைய கட்டுப்பாட்டிலும் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக் கூடாது. அவர்கள் சுதந்திரமாகத் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு தயவுசெய்து நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நான் தங்கியிருந்த resort–ல் என்னுடைய உடைமைகள் இருக்கின்றன. அதைக்கூட என்னால் திருப்பி எடுத்து வர முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி பரவாயில்லை. நீங்கள் சொல்லிவிட்டீர்கள் அல்லவா?

**திரு. S. செம்மலை:** எனக்கு நீங்கள் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். எனக்கு அச்சுறுத்தல்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனக்கு பயமுறுத்தல்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே தயவுசெய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள்.



2017 பிப்ரவரி 18]

**திரு. S. செம்மலை:** எனக்கு பல தொலைபேசிகள் மூலமாக அச்சுறுத்தல்கள் வருகின்றன. (குறுக்கீடு) தயவுசெய்து எனக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். என்னைப்பற்றி நீங்கள் தெரிந்தவர்கள். 1977–லிருந்து இன்றுவரை நீங்களும் நானும் சட்டமன்றத்தில் இருந்திருக்கின்றோம். பாராளுமன்றத்திலும் இருந்திருக்கின்றேன். அனைத்து விதிகளும் தெரியும், எல்லாம் தெரியும். மக்களுக்காகச் செயல்படக்கூடிய அந்த உரிமைகள்கூட எங்களுக்கு மறுக்கப்படுகின்றன. மக்களைச் சந்திப்பதற்குக்கூட நாங்கள் மறுக்கப்படுகின்றோம், தடுக்கப்படுகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, செம்மலை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. S. செம்மலை:** இது எந்த வகையிலே நியாயம்? நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி மக்களைச் சந்திக்கச் செல்வார்கள்? எந்த முகத்தோடு செல்வார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, செம்மலை, உட்காருங்கள்.

**திரு. S. செம்மலை:** எங்களுக்கு ஓர் அவப் பெயரை ஏற்படுத்துகின்றார்கள்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. S. செம்மலை:** கெட்ட பெயரை ஏற்படுத்துகிறார்கள். இரண்டு நாட்கள் என்னுடைய தொகுதிக்குச் சென்று வந்த பிறகுதான், நிலைமை எனக்குப் புரிந்தது. தயவுசெய்து எங்களைக் கேவலப்படுத்த வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதைப் பற்றி நீங்கள் இரண்டு பேரும் தானே சொல்கிறீர்கள்? திரு. செம்மலை, உட்காருங்கள். நீங்கள் சொல்லியிருக்கிற கோரிக்கையின் அடிப்படையிலே, அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன். உரிய பாதுகாப்பை உங்களுக்கு நான் நிச்சயம் அளிக்கிறேன். இன்னும் சிறிது நேரத்திலே வாக்கெடுப்பு நடக்கவிருக்கிறது. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தைரியமாக, எந்தவித மனசங்கடமும் இல்லாமல், சுதந்திரமாக, உங்களுடைய வாக்குகளை நீங்கள் விரும்புகிறபடி நிச்சயம் அளிக்கலாம். நான் அதற்கான முழு பாதுகாப்பை அளிக்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)*

உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறார். எனவே, அதை நீங்கள் சாதாரணமானது என்று நினைத்துவிடக் கூடாது. அவர் ஏதோ தனிப்பட்ட முறையில் அவருக்காக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் அதைச் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கத்திலே இங்கே நான் ஒரு பிரச்சினையை எழுப்பினேன். எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் அதைப் பற்றிப் பேசினார். நீங்களும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே, தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்பட்ட அவமானமாக அதை நான் கருதவில்லை. அவர் சொன்னதுமாதிரி 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இது மிகப் பெரிய அவமானம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படுகிற இந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்களின் பேச்சிலிருந்து மிகத் தெளிவாக அறிய முடிகிறது. அதுவும் இந்த அவையிலே பதிவாகி இருக்கிறது. மாண்புமிகு கவர்னர் அவர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பை 15 நாட்களுக்குள் நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 48 மணி நேரத்திற்குள்ளாக இந்த அவையைக் கூட்ட வேண்டிய அவசியம் என்ன? ஆகவே, இதை நாங்கள் சந்தேகப்படுகிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள் தெரிவித்திருக்கின்ற அடிப்படையிலே நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு நடக்கக்கூடிய நம்பிக்கை வாக்கெடுப்பு என்பது, நிச்சயமாக நடக்கக்கூடாது. எனவே, இதை ஒத்திவைத்து இன்னொரு நாளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக, (மேசையைத் தட்டும் ஒலி) அவரவர்கள் பணியிலே ஈடுபட்டு, சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை





உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நீங்கள் எங்களுக்குத் தரக்கூடிய பாதுகாப்பு. எனவே, அதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இருங்கள், பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். இன்றைக்கு ** நான் என்ன செய்யட்டும்? சரி, உட்காருங்கள். நான் பேசவில்லை. (குறுக்கீடு) நீங்கள் சிபாரிசு செய்ததால்தான் (குறுக்கீடு) நான் அதை withdraw பண்ணிக் கொள்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது சில கோரிக்கைகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதில் முதலாவதாக நான் சொல்ல வருவது. . .

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசியது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் நான் சொல்கிறேன், அது குறித்து முழுக்க, முழுக்க விசாரித்து உரிய முறையில் தக்க நடவடிக்கை எடுக்கிறேன். ஆகவே, நீங்கள் என்னை நம்பலாம். நீங்கள் பேரவைத் தலைவரை நம்பலாம். நடவடிக்கையை உறுதியாக எடுக்கிறேன், உட்காருங்கள். சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, உங்கள் இருக்கைக்குப் போங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிப் பேசியிருக்கிறார். நீங்கள் ஏன் இந்தச் சபையை அவசர அவசரமாகக் கூட்டி முடிவெடுக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன்.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

இந்த அரசை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அழைக்கும்போதே 15 நாட்களுக்குள் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அடுத்த ஒரு சில மணி நேரத்திலேயே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், 15 நாட்கள் கால அவகாசம் வேறு விவகாரங்களுக்கு வாய்ப்பு அளிக்கும். ஆகவே, உடனடியாக சட்ட சபையைக் கூட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே சில கருத்துகளைச் சொன்னார்கள். எல்லாவற்றையும் ஆய்ந்து பார்த்துதான் (குறுக்கீடுகள்) மேற்கொண்டு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

*(சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறுக்கிட்டனர்.)*

ஒத்துழைப்புக் கொடுங்கள். ஒத்துழைப்புக் கொடுங்கள். அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 தினங்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அதற்கெல்லாம் நான் பதில் சொல்ல முடியாது. என்னுடைய கவனத்திற்கு வரும் விஷயங்களைத்தான் நான் ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் அறியவில்லையா? ஆனால் தமிழக மக்கள், உலகத்திலே இருக்கின்ற அனைவருக்கும் கடந்த 15 தினங்களாக கூவத்தூரில் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் அடைத்து வைக்கப்பட்டதும், அங்கே நடைபெற்ற அராஜகமும் நன்றாகத் தெரியும். நேற்று இரவு கோயம்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தப்பித்தோம், பிழைத்தோம் என்று அங்கிருந்து சென்று இரவு எனக்கு போனில் பேசினார். என்னுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுங்கள். ஆனால் வெளியில் நடப்பதை விவாதமாக இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. அதற்கான வாய்ப்பில்லை. அதற்கு வாய்ப்பில்லை.



2017 பிப்ரவரி 18]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னைப் பேச விடுங்கள். என்னைப் பேச விடுங்கள். என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உங்களுடைய பாதுகாப்பு குறித்து என்னிடத்தில் ஏதாவது கோரிக்கை சொல்ல வேண்டுமென்று சொன்னால் தாராளமாகச் சொல்லுங்கள். வெளியில் நடக்கின்ற அரசியல் விவாதங்களுக்கெல்லாம் (குறுக்கீடு) என்னிடத்தில் அந்த மாதிரியான குற்றச்சாட்டு எதுவும் வரவில்லை, குற்றச்சாட்டு வந்தால் நான் நடவடிக்கை எடுப்பேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் விவாதமே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள் நேற்று இரவு கூவத்தூரிலே அடைக்கப்பட்டிருந்த அவர் தப்பித்து கோவை சென்று எங்களுக்கு டெலிபோன் செய்து, “அண்ணா, எங்களுக்குப் பாதுகாப்பில்லை, உயிருக்கு பயந்து நான் கோயம்புத்தூருக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். எங்களுக்கு உரிய பாதுகாப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லி, நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்” என்று சொல்லியிருக்கிறார். இதே நிலைதான் இங்கே அமர்ந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. 15 நாட்களாக கூவத்தூரில் இருக்கிற அந்த ரிசார்ட்டில் அடைக்க வேண்டிய காரணம் என்ன? (குறுக்கீடு) என்ன இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை இதெல்லாம் (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் என்னிடத்தில் பேசினால் எப்படி? இப்படியெல்லாம் பேசினால் நான் என்ன செய்வது?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, நான் ஒன்றே ஒன்று மட்டும் பேசிக்கொள்கிறேன். ஒரே ஒரு கோரிக்கைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரே ஒரு கோரிக்கை. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் தொகுதிகளுக்குச் சென்று, ஏனென்றால் மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு அதை அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்ற கடமை இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் உடல்நிலை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 18

பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும்கூட தொகுதிகளுக்கு வந்து, அவர்கள் பிரச்சாரம் செய்து எங்களையெல்லாம் வெற்றி பெறச் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன? இவர்கள் எல்லோரும் தொகுதிக்குச் சென்று மக்களுடைய கருத்தைக் கேட்டு, மீண்டும் சட்டமன்றம் கூடினால்தான் ஜனநாயக முறைப்படி இந்த வாக்கெடுப்பு நடைபெறும். இல்லையென்றால் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படி இதிலேயே discussion செய்து கொண்டிருந்தால் நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் சொல்வது அனைத்தையும் நான் கேட்க வேண்டுமென்று சொன்னால் எப்படி?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*(சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறுக்கிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்கட்டும். உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துகளைக் கேட்டு நல்ல தீர்ப்பு வழங்கக்கூடிய ஒரு நடுநிலையில் இருக்கிறீர்கள். நாங்கள் உங்களைப் பெரிதும் மதிக்கின்றோம். அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கின்றீர்கள். எங்களுடைய கருத்துகளை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், எங்களுடைய கருத்திலே இருக்கின்ற கருத்தாழத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கருத்தாழத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 15 நாட்களாக சட்டமன்ற உறுப்பினர்களை ரிசார்ட்டில் அடைத்து வைத்து, அவர்களுடைய நியாயமான கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்து இன்றைக்கு அப்படியே அவர்களை நான்கு பஸ்களில் ஏற்றிக் கொண்டு வந்து இங்கே இறக்கி இருக்கிறார்கள். அவர்களை தொகுதிக்குப் போக விடுங்கள்.



2017 பிப்ரவரி 18]

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு கோரிக்கையைச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, நீங்கள் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். முடியுங்கள். முடியுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.)*

நீங்கள் உட்காருங்கள். தயவு செய்து கொஞ்சம் அமைதியாக இருங்கள். உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். அவரைப் பேசவிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நாமெல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சபையில் கூடியிருப்பது எதற்காக? மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்காக. இந்த 15 நாட்களாக, “எங்களுடைய தொகுதி எம்.எல்.ஏ. எங்கே? அவரை வரச் சொல்லுங்கள், வரச் சொல்லுங்கள், வரச் சொல்லுங்கள்” என்று அங்கேயெல்லாம் போஸ்டர் அடித்து, தொலைபேசி மூலமாக, Whats App மூலமாகச் செய்திகளை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், யாரும் அங்கே போய்ச் சேரவில்லை. அவர்களை அங்கே அனுப்பி, நீங்கள் 4, 5 நாட்கள் அவகாசம் கொடுத்து, சுதந்திரமாக அவர்களைப் போகவிட்டு, அவர்கள் திரும்ப இங்கே வந்தால், அதுதான் நியாயமான வாக்கெடுப்பாக நடக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இன்னும் ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். இந்த வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாகத்தான் நடத்தப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் அவர்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியும். இல்லையென்றால் அவர்கள் வாக்களிக்க முடியாது. ஏனென்று சொன்னால், உயிருக்கு பயந்து கொண்டு அவர்கள் வெளிப்படையாக வாக்களிக்க முடியாத சூழ்நிலை உறுதியாக ஏற்படும் என்பதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, இரகசிய வாக்கெடுப்புதான் வேண்டும், இரகசிய வாக்கெடுப்புதான் வேண்டும், இரகசிய வாக்கெடுப்புதான் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்லி இருக்கிறதை எல்லாம் நான் ஆராய்ந்து. . .

[2017 பிப்ரவரி 18

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாண்டியராஜன், நீங்கள் உங்கள் சைடில் வாய்ப்பு கேட்டீர்கள், மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் கேட்டார், அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். திரு. க. பாண்டியராஜன், பிறகு நீங்களும் எழுந்திருந்தால் எப்படி? எப்போதுதான் நான் முடிப்பது? எப்போதுதான் நான் அடுத்த பிரச்சினைக்குப் போவது? போதும் உட்காருங்கள். போதும் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே, திருமதி ராப்ரிதேவி அவர்கள்மீது சட்டமன்றத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, இரகசிய வாக்கெடுப்பு நடத்தித்தான் அங்கு முடிவெடுக்கப்பட்டது. அதைப்போல, நம்முடைய சட்டமன்றத்திலும் அரசினுடைய நம்பிக்கையைக் கோரும் தீர்மானத்தை இரகசிய வாக்கெடுப்பு நடத்தித்தான் நீங்கள் தீர்மானிக்க வேண்டும், வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுடைய கோரிக்கையைச் சொல்லியிருக்கிறீர்கள். உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், வாய்ப்பெல்லாம் தர முடியாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நான் பேசிய அந்தக் கருத்தின் அடிப்படையிலே ஒரு சில பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டினீர்கள். 15 நாட்கள் ஆளுநர் அவர்கள் அவகாசம் தந்த நேரத்தில், 15 நாட்களுக்குள் சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்று சொன்னபோது, அதிக நாள் இருக்கிறது என்று நான் சொன்னதாகச் சொன்னது, நான் சொன்னது உண்மைதான். ஆனால், நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னதைப்போல, கூவத்தூரிலே பிணைக் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்திலே இரண்டொரு நாளிலே நடத்துவது முறையாக இருக்காது. ஆகவே, அவர்களைச் சுதந்திரமாக வெளியிலே விட்டுத்தான், அதற்குப் பிறகு, இந்த முடிவை எடுத்து சட்டமன்றத்தைக்கூட்டி வாக்கெடுப்பு நடத்தக்கூடிய சூழ்நிலையை நீங்கள் அமைத்துத் தந்திருந்தால் அது நியாயமாக நடந்திருக்க முடியும். ஆகவே, அதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த, வலியுறுத்த விரும்புகிறேன்.



2017 பிப்ரவரி 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

இரண்டாவதாக, நம்முடைய மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர். நிதித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, 3 முறை இதே தமிழ்நாட்டிலே முதலமைச்சர் பொறுப்பை ஏற்று அவர் இருந்திருக்கிறார். ஆக, அவருடைய அனுபவத்தின் அடிப்படையிலே ஓர் அருமையான கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். வாக்கெடுப்பைப் பொறுத்தவரையிலே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வெளியில் இருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இல்லாமல் 10 நாட்களுக்கு மேலாக பிணைக் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் சுதந்திரமாக இல்லாத காரணத்தால் அவர்கள் அச்சத்தோடுதான் வாக்களிக்கக்கூடிய சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பது இந்த அவையிலே உட்கார்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்களின் முகத்தைப் பார்த்தாலே நன்றாகத் தெரிகிறது. எனவே, தயவுகூர்ந்து நான் கேட்டுகொள்ள விரும்புவது, அவர் சொன்னதுபோல, இரகசிய வாக்கெடுப்பு நடத்துகிற அந்தச் சூழ்நிலையை, அவர் அருமையான கருத்தைச் சொன்னதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் வழிமொழிகிறேன். அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள். இன்னொரு நாள் வேறு ஒரு கருத்தினைச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தனர்.)

இதையெல்லாம் கேட்டுக்கொண்டு, எனக்கு நியாயமாகப்படுவதை, விதிகளுக்குட்பட்டு, நான் செயல்படுகிறேன். அதில் ஒன்றும் தவறு

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள்.

*முற்பகல் 11–40*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, முதலில் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, சொல்லுங்கள்; நீங்கள்தான் சொல்லமாட்டேன் என்கிறீர்களே!

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக நாம் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது அரசு இயங்குகிறதா என்ற ஒரு சந்தேகக்குறி ஏற்பட்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு, தற்பொழுது பல நிகழ்ச்சிகள், தவிர்க்கப்பட வேண்டிய பல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

*(சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.)*

இல்லை, இப்படி உட்கார்ந்து கொண்டே பேசினால் நான் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடு) உட்காருங்கள், பேசாமல் அமருங்கள். (குறுக்கீடு) நான் அவரைத்தானே சுருக்கமாகப் பேசச் சொன்னேன். நீங்கள் ஏன் இப்படி நடந்துகொள்கிறீர்கள்? (குறுக்கீடு)

*(எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாமென்று சைகை செய்தார்.)*

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எனக்கு எப்படி உதவி செய்கிறார் என்பதைப் பாருங்கள். திரு. இராமசாமி, சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** நீங்கள் இவ்வளவு நாட்களாக சொன்னதை நான் கேட்டுக்கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.



2017 பிப்ரவரி 18]

**திரு. கரி. இராமசாமி:** இந்த முறை தயவுசெய்து நீங்கள் என்னைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** தற்பொழுது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், ஏன் இப்படி அடிக்கடி மாறுதல்கள் வருகின்றன? மாறுதல்கள் என்றால், சின்ன, ஓர் அதிகாரி மாறுதல் அல்ல! முதலமைச்சர்களே மாறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டில், ஒரு மிகப்பெரிய தீர்ப்பு உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பினுடைய நிலை என்ன என்பதை தமிழக மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே, நீங்கள் இப்பொழுது நம்பிக்கை வாக்கெடுப்பு கோரி இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு இங்கே இருக்கக்கூடியவர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், கால அவகாசம் போதாது, இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுடைய தொகுதிகளுக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்கு ஏன் அனுமதி கொடுக்கவில்லை?

இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இதுபோன்று ஓரிடத்திலே சட்டமன்ற உறுப்பினர்களை வைத்திருப்பது தவறு. அவர்களை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், இந்த இடத்திலே நான் ஒன்றைச் சொல்கிறேன். இதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அவ்வழக்கு file செய்யப்பட்டு, (குறுக்கீடு) திரு. இராமசாமி, சொல்வதைக் கேளுங்கள். நீதியரசர் உத்தரவுக்கிணங்க, அதிகாரிகள் அளித்த விளக்கமான ஆய்வறிக்கை உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கின்றது. இதற்குப் பிறகு நான் ஒன்றும் அதில் கருத்து சொல்வதற்கு இல்லை. நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, பேசட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருகிறீர்கள்! ஆனால், வரிக்கு வரி நீங்கள் குறுக்கீடு செய்தால், நான் எப்படி அவையை நடத்துவது? நான் இன்றைக்கு சபையில் எடுத்துக்கொண்ட

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

அலுவல்களை முடிக்க வேண்டும் அல்லவா? (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் எனக்குச் சாதகமாக இருக்கிறீர்களா? ரொம்ப சந்தோஷம், சொல்லுங்கள்.

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் அங்கிருக்கின்ற விஷயம். பொதுவாக ஒன்று சொல்லிவிடுகிறேன். மன்றத்தினுடைய நடைமுறையை நீங்களும் நன்றாக அறிந்தவர்கள். ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதாலேயே அதுகுறித்து இந்த அவையிலே பேசக்கூடாது என்று கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலோட்டமாகப் பேசுங்கள். அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** மேலோட்டமாக பேசலாமே தவிர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் பேச அனுமதித்துவிட்டேனே.

**திரு. துரைமுருகன்:** இப்போது இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் அவர் இப்போது சொல்கிறார், மாண்புமிகு உறுப்பினர்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டார்கள் இதுகுறித்து வழக்கு இருக்கிறது என்றார். வழக்கு இருக்கின்றபோது இங்கு நாம் ஓட்டெடுப்பு எடுப்பது தவறு. ஆகையினாலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 15 நாட்களுக்குள் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்குள் நடத்துவது என்னுடைய கடமை. அதிக காலம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் உடனடியாக உத்தரவிட்டிருக்கிறேன். ஒத்துழைப்புக் கொடுங்கள். மாண்புமிகு திரு. இராமசாமி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விடுங்கள். அவற்றையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையிலே இப்போது நீங்கள் நம்பிக்கை வாக்கு கோர இருக்கிறீர்கள். ஆனால், இங்கே இருக்கக்கூடிய வித்தியாசமான ஒரு நிலைமையிலே. . .



2017 பிப்ரவரி 18]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சரி, திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இந்த நிலையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கையை நோக்கி வந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். இதெல்லாம் சரியல்ல. உட்காருங்கள். நீங்கள் உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். போய் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் சொல்வதைக் கேளுங்கள். நீங்களே சொல்லுங்கள். நான் சொன்னால் கேட்கவில்லை. முதலில் உட்காரச் சொல்லுங்கள். முதலில் உட்காரச் சொல்லிவிட்டு பிறகு பேசுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலில் உங்கள் கட்சி உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு, பேரவையினுடைய செயலாளராக இருப்பவர் சில நேரங்களில் முடிவெடுப்பதற்கு உறுதுணையாக சில விவரங்களைத் தெரிவிக்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் எல்லாவற்றையும் தெரிந்துவர முடியாது. செயலாளர்தான் செய்ய வேண்டும். ஆனால் நல்லது செய்ய வேண்டும். கெட்டுப்போவதற்கே வழி சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் என்னுடைய செயலாளரோ, என்னுடைய தனிச் செயலாளரோ எனக்குச் சில யோசனைகளை, சில விவரங்களைத் தெரிவிப்பதை நீங்கள் மறுக்கக் கூடாது, மறுக்க முடியாது; சட்டத்தில் அதை மறுப்பதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன், என்ன? உங்களுக்குத்தான் நிறைய வாய்ப்புக் கொடுத்தேன். திரும்பத் திரும்ப எழுந்தால் எப்படி? தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, ஒத்துழைப்புக் கொடுத்து சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையிலே நடக்கக்கூடிய இந்த வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக நடைபெற வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். நிச்சயமாக இரகசிய வாக்கெடுப்பு எடுத்தால்தான் இதில் இருக்கக்கூடிய பல சந்தேகங்களுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும். நீங்கள் நிச்சயமாக அவ்வாறு செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. அதைச் செய்து கொடுக்கும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடிக்கின்றவரை வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் அடிக்கடி எழுந்து குறுக்கிட்டால் எப்படிச் சபையை நடத்துவது? ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்களே? என்ன செய்வது? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

*முற்பகல் 11–50*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அவை நடவடிக்கைகளிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மன்றத்தினுடைய மூத்த உறுப்பினர்களும் ஒரு சுமுகமான, ஜனநாயக ரீதியான சில நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று உளப்பூர்வமாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த ஆட்சி மே மாதம் 19 ஆம் தேதி அமைக்கப்பெற்று இன்றோடு 9 மாதங்கள்தான் கடந்து இருக்கின்றது. இந்த 9 மாதங்களிலே நாம் பல்வேறு அசாதாரணமான சூழ்நிலைகளையெல்லாம் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். அதுவும் குறிப்பாக, மறைந்த முதல்வர் அவர்கள் 75 நாட்கள் மருத்துவமனையிலே இருந்து, தொடர்ந்து அவர்கள் மரணம் அடையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதன்பிறகு புதிய முதல்வர்; அதன்பிறகு இப்போது மீண்டும் ஒரு புதிய முதல்வரை நியமித்து அதுசம்பந்தமாக மக்கள் மன்றத்திலும், பல்வேறு ஊடகங்களிலும் தமிழகத்தைப் பற்றிய ஒரு தவறான, தரம் தாழ்த்திய விமர்சனங்களெல்லாம் நடந்துவரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் வெளிப்படையாக, ஜனநாயக ரீதியிலே அனைத்து உறுப்பினர்களும் அவர்களுடைய வாக்குகளைப் பதிவு செய்யக்கூடிய வகையில், இங்கே எதிர்க்கட்சியும், காங்கிரஸ் இயக்கமும், மூத்த உறுப்பினர்களும் தெரிவித்திருக்கக்கூடிய அந்த அடிப்படையில், மறைமுகமான ஒரு வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்பதை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக உங்களிடத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், அனுமதியில்லை. இதற்குமேலேயும், நீங்கள் குறுக்கீடு செய்துகொண்டேயிருந்தால் நான் என்ன செய்வது? நீங்கள் பேச வாய்ப்புக் கேட்டீர்கள். நான் முழு வாய்ப்புத் தந்தேன். நீங்கள் முழுவதுமாகப் பேசி முடிக்கிற வரையிலும், நான் ஒன்றுமே குறுக்கிடவில்லை. திரும்பவும் பேச வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சபையினுடைய நாகரிகம் கருதி, மாண்புமிகு அமைச்சர்களுடைய நாகரிகம் கருதி, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நாகரிகம் கருதி நான் எதையும் சொல்லாமல் இருந்தேன். நான் முதலமைச்சராக இருந்த நேரத்தில், பல அமைச்சர்கள், பல சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டு, அந்த நிகழ்வுகள் சென்றுகொண்டிருக்கும்போது, 'அண்ணா நாங்கள் தொகுதிகளுக்குள்ளேயே போக முடியவில்லை. அவ்வளவுதூரம் எங்களை மக்கள் திட்டுகின்றனர்.' அப்படியென்று சொன்ன காரணத்தினாலேதான், நான் இன்றைக்கு, இவர்களெல்லாம் மீண்டும் அவர்களுடைய தொகுதிகளுக்குச் சென்று, மக்களுடைய, வாக்காளர்களுடைய கருத்துகளைக் கேட்டு, இங்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று வலியுறுத்துவதற்கு முக்கியக் காரணமே, இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற பல சட்டமன்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 18

உறுப்பினர்களுக்கு, பல அமைச்சர்களுக்கு நன்றாகவே தெரியும். அவர்களே என்னுடைய அறைக்கு வந்து, நேரடியாக என்னையே பார்த்துச் சொன்னார்கள். இதை வெளியில் நீங்கள் சொல்ல வேண்டாம், இரகசியமாகக்கூட வைத்துக்கொள்ளுங்கள் என்று நானே அவர்களிடம் அறிவுரைகூறி அனுப்பி வைத்திருக்கிறேன். அந்த அளவுக்குக் கட்சியினுடைய கட்டுப்பாட்டை நான் காத்து வந்திருக்கின்றேன் என்பதனை நான் வலியுறுத்திச் சொல்வதற்காகச் சொல்கிறேன். அவர்கள் சொன்ன வார்த்தை, நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிகழ்ச்சி, 'எங்களால் உள்ளே போக முடியவில்லை; எல்லோரும் திட்டுகிறார்கள்; எல்லோரும் திட்டுகிறார்கள்; நல்ல முடிவு எடுங்கள், எடுங்கள் என்று திட்டுகிறார்கள்' என்று மாண்புமிகு அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம், கையெடுத்து கும்பிடுகிறேன், ஒரு நல்ல தீர்ப்பை வழங்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் சொன்ன கருத்துகளையெல்லாம், என்னுடைய கவனத்திற்கு. . .

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன், ஏன் குறுக்கிடுகிறீர்கள்? என்ன இது? உங்களுக்குப் பேச வாய்ப்பில்லை. நீங்கள், உட்காருங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

உட்காருங்கள், நீங்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். இது என்ன முறையாகும்? உட்காருங்கள்.

*(உறுப்பினர்கள் திரு. க. பாண்டியராஜன் மற்றும் திரு. ஆர். நடராஜ் ஆகியோர் பேச வாய்ப்புக் கோரினர்.)*

யாராவது ஒருவர், ஓரிரு நிமிடங்களில் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.



2017 பிப்ரவரி 18]

**திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜ், உங்கள்மீது எனக்கு அதிக மரியாதை எப்போதுமே இருக்கிறது. என்ன பேசப் போகிறீர்கள் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. ஆர். நடராஜ்:** ஒரே நிமிடத்தில் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். நான் எந்த அணியையும் சேர்ந்தவன் அல்ல. மிகப் பெரிய இந்த இயக்கம் ஒற்றுமையாக நடத்தப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று உரைத்தவர் அம்மா அவர்கள். எல்லோரும் அதைத்தான் சொல்கிறோம்; 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்'. தொகுதிக்கு சென்றால் இவர்கள் எல்லோரும் எவ்வாறு அவர்கள் மக்களைச் சந்திக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அங்கு, நிச்சயமாக நான் இருக்கும்போது மக்களிடமும் அந்தவித ஒரு கொதிப்பு இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆதலால், இந்த 48 மணி நேரத்திற்குள் இந்த வாக்கெடுப்பு நடத்துவது சரியானதல்ல, நியாயமானதல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* நிச்சயமாக இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அவர்களுடைய இடங்களுக்குச் செல்ல வேண்டும். நாம் மக்களுடைய குறைகளைக் கூறுவதற்குத்தான் இங்கு வந்திருக்கிறோம். இது மக்கள் மன்றம். இந்த மக்கள் மன்றத்தில், நாம் மக்களுடைய குறைகளைக் கூறுகிறோம். அவர்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கு வந்திருக்கின்றோம். அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை உணர்ந்து நாம் இங்கு வந்து அந்தத் தீர்ப்பினை அளிக்க வேண்டும். அதற்காகத்தான் நாம் இருக்கிறோம் என்பதை எல்லோரும் உணர வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில், நியாயமான கருத்தினை, நான் உங்கள் எல்லோருக்கும் முன் வைக்கிறேன், நன்றி.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

உங்களுடைய உணர்வுகளை நான் பதிவு செய்துகொள்கிறேன். உட்காருங்கள், உட்காருங்கள்.

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)*

உட்காரச் சொல்லுங்கள் உங்கள் உறுப்பினர்களை. இல்லையில்லை, இப்போது இந்தச் சபையை நான் நடத்துகிறேனா? இல்லை நீங்கள் நடத்துகிறீர்களா என்று தெரியவில்லை.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோருக்கும் வாய்ப்புத் தர சொல்கிறீர்கள். அவர் புது point சொல்லப் போகிறாரா, பழைய point சொல்லப் போகிறாரா என்று எனக்கு எப்படித் தெரியும்? இப்படி வாய்ப்புக் கேட்டுக் கொண்டேயிருந்தால் எப்படி? சரி, ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது point தான். தங்கள் அறையில் வந்து தங்களைச் சந்தித்து, புதிய கொறடா நியமித்ததை நான் உங்களிடம் தெரிவித்துவிட்டு வெளியில் வரும்போது எனது தொலைபேசிக்கு வந்த அழைப்பில், “இந்தமாதிரி நீ செய்து கொண்டிருந்தால், ஆசிட் அடிப்போம், சட்டமன்ற உறுப்பினர்கள்மீது ஆசிட் அடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பது தெரியும், அவ்வாறு ஆசிட் அடிப்போம்” என்று மிரட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில், உறுப்பினர்கள் எப்படி மனசாட்சிப்படி ஓட்டுப் போட முடியும்? கண்டிப்பாக secret ballot வைக்க வேண்டும். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் சொன்னதுபோல், ஐந்து நாட்களுக்குப் பிறகு வாக்கெடுப்பினை வையுங்கள். உங்களைச் சந்தித்துவிட்டு வருகிறபோது—கவர்னரைப் பார்த்துவிட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தை நான் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. ஜெ. அன்பழகன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று குறுக்கிட்டனர்.)*



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

அதெல்லாம் இல்லை, நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது, உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், திரு. ஜெ. அன்பழகன். . .

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் பேசுவதா, வேண்டாமா? சொல்லுங்கள். மைக்கைக் கொடுத்துவிட்டு இப்படி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள் நீங்கள். நான் எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் கேட்டால் வாய்ப்புத் தருகிறேன். அதேமாதிரி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டால் வாய்ப்புத் தருகிறேன். Front bench–ல் எதிர்க்கட்சிக் கொறடா கேட்டால் வாய்ப்புத் தருகிறேன். எல்லா உறுப்பினர்களும் வாய்ப்புக் கேட்டால் எப்படித்தான் நான் சபையை நடத்துவது? உட்காருங்கள். திரு. ஜெ. அன்பழகன், ஒரே நிமிடத்தில் உங்களுடைய கருத்தைச் சொல்லி, உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ஏன்? ஒரு செகண்ட் கொடுங்களேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தையெல்லாம் இப்படிச் சொல்லக் கூடாது. காலையிலேயிருந்து ஒரு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருந்தார்களே? அதையெல்லாம் கேட்டீர்களா? நான் சொல்ல வருகிற கருத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத்தான் நான் வேண்டாம் என்று சொன்னேன். வேறொன்றுமில்லை.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள், ஆளுங்கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்கள் எல்லோரும் நான் சொல்ல வருகிற கருத்தை உங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஓர் அசாதாரண சூழ்நிலை இருக்கிறது. அதை நீங்கள் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில், **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் தேவையில்லாத வார்த்தைகள், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

நீங்கள் இந்த அவை சம்பந்தமான விஷயங்களை, பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களைச் சொன்னீர்கள். நான் கேட்டுக்கொண்டேன். நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மற்றதையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்ய முடியாது. இதெல்லாம் தேவையில்லாதது. உட்காருங்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. இரவிச்சந்திரன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஜெ. அன்பழகன். உங்களுடைய கருத்தை நான் பதிவு செய்துவிட்டேன். வேறு ஏதேதோ பேசுகிறீர்களே?

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு தீர்ப்பு வந்தபிறகு, வெளியிலே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவைக்கு சம்பந்தமில்லாதவற்றைப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

சபையை நீங்கள் நடத்துகிறீர்களா? நான் நடத்துகிறேனா? நான் அனுமதித்துவிட்டேன். அவர் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொன்னால் பரவாயில்லை.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்.)*

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உங்கள் உறுப்பினரை சுருக்கமாகச் சொல்லச் சொல்லுங்கள்.



2017 பிப்ரவரி 18]

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இன்றைக்கு வெளியிலே மக்கள் கருத்தினை, இப்போது மயிலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னார். ஆனால், இங்கே சிறையிலிருக்கிற சசிகலாவினுடைய பினாமி ஆட்சியை மக்கள் நிராகரிக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துவிட்டு வரட்டும். கவர்னர் ஒன்றும் 48 மணி நேரத்தில் சட்டமன்றத்தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. 15 நாட்கள் அவகாசம் கொடுத்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இன்னும் ஒரு வாரம் கழித்து, அடுத்த வாரம் சனிக்கிழமை இந்தக் கூட்டத்தைக் கூட்டி, நம்பிக்கை கோரும் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள். அதுதான் மக்களுடைய விருப்பம்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி, உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும் உட்காருங்கள். உங்களுடைய கருத்தை நான் பதிவு செய்துவிட்டேன். நான் பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், நீங்களே சொல்லுங்கள். அவர் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால், நான் என்ன செய்வது? இது சரியில்லை, நான் என்ன செய்வது?

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)*

அனைவரும் உட்காருங்கள். எல்லோருடைய கருத்துகளையும் நான் பதிவு செய்து கொள்கிறேன்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு சட்டமன்றம் வாக்கெடுப்பு நடத்துவதற்காகக் கூடியிருக்கிறது; நீங்கள் சுதந்திரமாக வாக்களிக்கலாம். உங்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இங்கே இல்லை. நீங்கள் சுதந்திரமாக வாக்களிக்கலாம். அதற்குரிய பாதுகாப்பை நான் தருகிறேன்.

[2017 பிப்ரவரி 18

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், என்ன விதி இருக்கிறதோ அதைத்தான் நான் செய்ய முடியும். உட்காருங்கள். நீங்கள் சொல்வதற்காக நான் அப்படியெல்லாம் செய்ய முடியாது. விதியில் என்ன இருக்கிறதோ, அதன்படிதான் நான் செய்ய முடியும். விதியில் என்ன இருக்கிறதோ, அதை நான் செய்கிறேன். உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குறுக்கிட்டனர். பின்னர் அவர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை நோக்கி வந்து, பேரவைத் தலைவரை சூழ்ந்து நின்றனர்.)

இது என்ன முறை? உங்கள் இடத்திற்குப் போங்கள்.

(திரு. ஜெ. அன்பழகன் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே நின்றுகொண்டு பேரவைத் தலைவரிடம் ஏதோ பேசினார்.)

நீங்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். திரு. ஜெ. அன்பழகன், இதெல்லாம் முறையல்ல.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 'ஒத்தி வை; ஒத்தி வை' என்றும், "மாற்று மாற்று; தேதியை மாற்று" என்றும் கோஷமிட்டனர்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இ. கருணாநிதி பேரவைத் தலைவரின் அருகே உள்ள மேடையின்மீது ஏறி நின்று கோஷமிட்டார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் "ஒத்தி வை; ஒத்தி வை; தேதியை ஒத்தி வை" என தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் இருக்கைகளின்மீது ஏறி நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் தான் வைத்திருந்த தாளினைக் கிழித்து எறிந்தார்.)

உங்கள் இடத்திற்குப் போங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். திரு. ஜெ. அன்பழகன், முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், "ஒத்தி வை; ஒத்தி வை; தேதியை ஒத்தி வை" என தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள் செய்வது முறையல்ல.

(உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் பேரவைத் தலைவரை நோக்கி கையை நீட்டி ஏதோ பேசினார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் வரிசையிலிருந்து சில புத்தகங்கள் கிழிக்கப்பட்டு, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் பகுதியை நோக்கி வீசப்பட்டன.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், பேரவைத் தலைவரின் முன்புறம் உள்ள சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களின் மேசையிலிருந்த சில புத்தகங்களையும், கோப்புகளையும் கிழித்து, வீசி எறிந்தனர்.)

பிற்பகல் 12–05

இது என்ன முறை? இது நியாயமா? இப்படிச் செய்கிறீர்களே? இது நியாயமா? உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சு. புகழேந்தி மேசைமீது வைத்திருந்த பேப்பரைக் கிழித்து வீசி எறிந்தார்.)

(பேரவைச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளரை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சூழ்ந்து கொண்டனர்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் பேரவைச் செயலாளரின் மேசையின்மீது இருந்த writing pad–ஐ எடுத்து வீசி எறிய முற்பட்டார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் பேரவைச் செயலாளரை தடுத்து நின்று ஏதோ பேசினார்.)

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் பேரவைச் செயலாளரின் இருக்கையை தலைக்குமேல் தூக்கி வீசி எறிய முற்பட்டார்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களது மேசையின்மீது இருந்த புத்தகங்களை எடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதியை நோக்கி வீசி எறிந்தனர்.)*

*(திரு. க. கார்த்திகேயன், திரு. இ. கருணாநிதி, திரு. விஜி. ராஜேந்திரன், திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உள்ளிட்ட சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகேயுள்ள மேடைமீது ஏறி நின்றுகொண்டு "ஒத்தி வை, ஒத்தி வை, அவையை ஒத்தி வை" எனக் கோஷமிட்டனர்.)*

*முதலில் உங்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மேசை மற்றும் மைக்கை கீழே தள்ளிவிட்டார்.)*

*(பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகிலிருந்த குப்பைக் கூடை ஆளுங்கட்சியினர் அமர்ந்திருந்த பகுதியை நோக்கி வீசி எறியப்பட்டது.)*

*பிற்பகல் 12–10*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டு, தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் பிற்பகல் 1–00 மணிக்குக் கூடும்.*

*(பேரவையை ஒத்திவைத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேறியபோது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. க. கார்த்திகேயன், திரு. ப. ரங்கநாதன். திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. விஜி. ராஜேந்திரன், திரு. ஆர்.டி. அரசு, திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வெளியேறவிடாமல் இடைமறித்து, முற்றுகையிட்டுத் தடுத்தனர்.)*



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கையைப் பிடித்து இழுத்தார்.)*

*(மேலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலரால் மாண்புமிகு பேரவைத் தலைவரின் சட்டை பிடித்து இழுக்கப்பட்டது.)*

*(அவைக் காவலர்கள் பேரவைத் தலைவரைப் பாதுகாப்பாக பேரவையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றனர்.)*

*பின்னர், பேரவை பிற்பகல் 12–11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 1–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். நிறைய பேசியாகிவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஜெ. அன்பழகன், தயவுசெய்து உட்காருங்கள். இல்லை, உங்களை நான் மிகவும் மதிக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். உட்காருங்கள். சற்று நேரத்திற்குமுன் அவை கூடியபோது நடந்த சம்பவங்களை நான் மீண்டும் வற்புறுத்த விரும்பவில்லை. ஏனென்று சொன்னால், அது என்னுடைய மனதை மிகவும் காயப்படுத்தி இருக்கிறது. ஒரு பேரவைத் தலைவரை எவ்வளவு,. . .

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டு இருந்தனர்.)*

உறுப்பினர்கள் தயவுசெய்து உட்கார்ந்துகொண்டு பேசவேண்டாம். உங்களுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துங்கள். அதாவது, ஒரு பேரவைத் தலைவரை—நான் ஒரு சாதாரண, மிக, மிக சாமானிய குடும்பத்திலிருந்து வந்து, இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறேன். இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிற எனக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று உங்களுக்கு அன்பான வேண்டுகோள் வைக்கிறேன். ஒரு சபாநாயகரின்

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

'சட்டையைக் கிழித்து', இந்தமாதிரி 'சட்டையைக் கிழித்து' சபாநாயகர் பதவியை அவமானப்படுத்துவது எவ்வளவு மோசமாக இருந்தாலும் பரவாயில்லை. அதை நான் தாங்கிக்கொள்கிறேன். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

இந்தச் சபையில் என்னை பேரவைத் தலைவராக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இந்த அவையின் விதிகள் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின்படிதான் நான் இந்தச் சபையை நடத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டு, நான் அப்படியே நடக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்தால் அது தவறு. நான் இந்தச் சபையை நடத்துகின்றபோது, அவை விதிகளுக்கு எதிராக எந்தவிதத்தில் செயல்பட்டாலும், தயவுசெய்து நீங்கள் சொல்லுங்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்; அதைத் திருத்திக்கொள்கிறேன். ஆக, விதிகளுக்கு மாறாக, நீங்கள் சொல்வதையெல்லாம் நான் செய்யவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்தால் நிச்சயம் சட்டப்படி அதைச் செய்ய முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நான் நடந்ததையெல்லாம் மறந்துவிடுகிறேன். தயவுசெய்து அதை நான் பெரிதுபடுத்தவில்லை. ஆகவே, மேற்கொண்டு மேதகு ஆளுநர் அவர்கள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி சொன்னதன்பேரில், இன்றைக்கு இந்தச் சபையிலே நம்பிக்கை கோருகிற வாக்கெடுப்பை எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று உங்களுக்கு என்னுடைய வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(உறுப்பினர் திரு. S. செம்மலை தொடர்ந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஏற்கெனவே நடைபெற்ற சில சம்பவங்களை இங்கு மீண்டும் பேசி, அதைப் பெரிதுபடுத்த



2017 பிப்ரவரி 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

விரும்பவில்லை, அத்தோடு விட்டுவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு, ஆனால், நீங்கள் அதைப்பற்றியே இங்கு நடந்த சில செய்திகளையெல்லாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு நடந்ததை இங்கு சொல்லாமல், வேறு எங்கு போய் சொல்வது?

**திரு. மு.க. ஸ்டாலின்:** நான் சொல்லிவிடுகிறேன். இல்லை, நான் தவறு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 234 உறுப்பினர்களுக்கும் பேரவைத் தலைவர்தான் பாதுகாப்பு என்று சொன்னீர்கள். நான் அதை ஏற்றுக்கொண்டு உங்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கிறேன் என்று சொன்னேன். அதேநேரத்திலே, எனக்கு நிகழ்ந்த ஒரு கொடுமையை, எனக்கு நேர்ந்த கொடுமையை இந்த அவையிலே சொல்லாமல் வேறு எங்கே போய் சொல்லச் சொல்கிறீர்கள்? இந்த அவையிலேதான் நான் சொல்ல வேண்டும். அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து, நிகழ்ந்த நிகழ்வுக்காக பெருந்தன்மையாக வருத்தம் தெரிவித்தீர்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு அதைப்பற்றி பேச வேண்டாம், விட்டுவிடலாம். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே என்னை அறைக்கு அழைத்தீர்கள். நானும், எங்களுடைய துணைத் தலைவரும் மற்றும் சில உறுப்பினர்களும் தங்களுடைய அறைக்கு வந்தோம். அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கே அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் நடந்த சில சம்பவங்களை நீங்கள் சொன்னீர்கள். 'சட்டைக்கூட கிழிந்திருக்கிறது' என்பதையெல்லாம் என்னிடத்திலே சுட்டிக்காட்டினீர்கள். எங்களுடைய உறுப்பினர்கள் இந்தத் தவறுக்கு காரணமாக இருந்திருந்தால், நிச்சயமாக அதற்காக உங்களிடத்திலே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று நான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துவிட்டேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அதையும் தாண்டி சொல்கிறேன், 'மன்னிப்பைக்கூட' கேட்டுக்கொள்ள தயார் என்று சொன்னேன்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 பிப்ரவரி 18

அதோடு விட்டுவிட்டீர்கள் என்று நான் நினைத்தேன். ஆனால், இங்கு வந்து நீங்கள் அதை சொல்கின்றபோது, நீங்கள் வேண்டுமென்றே 'சட்டையைக் கிழித்துவிட்டு', ஏதோ அரசியல் செய்வதற்காக நடத்துகிற காரியமா என்று எண்ண வேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவ்வளவுதான்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதைப்போல, பேரவைத் தலைவராகிய எனக்கு இதிலே அரசியல் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. அந்த மாதிரி சூழ்நிலை எனக்கு இல்லை. எனக்கு நடந்ததைத்தான் நான் சொன்னேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். அதோடு விட்டுவிடலாம். பதிவு செய்துவிட்டேனல்லவா? நீங்கள் சொன்னதையும் பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** நீங்கள் எங்களை அறைக்கு அழைத்து, சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, மீண்டும் இந்தச் சபை தொடர்ந்து நடக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு எங்களிடம் கேட்டீர்கள். அப்பொழுது, நாங்கள் மீண்டும் அதைத்தான் சொன்னோம். ஒன்று, இரகசிய வாக்கெடுப்பு நடத்துங்கள் அல்லது ஒரு வார காலம் இந்த அவையை ஒத்தி வைத்து, அதற்குப் பிறகு இந்த வாக்கெடுப்பை நடத்துங்கள் என்று சொன்னோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதற்கான விதிமுறை எனக்கு இல்லை. அதனால் இரகசிய வாக்கெடுப்பு நடத்த முடியாது என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், தள்ளி வைப்பதற்கு விதிகளிலே



2017 பிப்ரவரி 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

இடம் இருக்கிறது; உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, நீங்கள் எங்கள் கோரிக்கைகள் இரண்டில் ஒன்றினை நிறைவேற்றித் தந்தால்தான், நாங்கள் இதில் முழுமையாகக் கலந்துகொள்ள முடியும். எனவே, இந்த அவைத் தலைவராக இருக்கக்கூடிய உங்களிடத்திலே அதை மீண்டும், மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சற்று நேரத்திற்கு முன்பு இந்த அவையில் தனக்கு ஏற்பட்ட நிகழ்வு அவருக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்தீர்கள். அதற்கு எங்களுடைய வருத்தத்தையும் நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய கோரிக்கைகள் இரண்டு கோரிக்கைகள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிக்குச் சென்றுவிட்டு, ஒரு வார காலத்திற்குப் பிறகு இங்கே வந்தால், இந்த சபையில் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்திற்கு நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் நாங்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு நியாயமான தீர்ப்பினை, மக்களுடைய எண்ணங்களை, தமிழக மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் உங்களுடைய தீர்ப்பு இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். நீங்களும் ஊருக்கெல்லாம் போய்விட்டு வந்திருக்கிறீர்கள். மக்களுடைய எண்ணங்கள் என்ன என்பதை நீங்கள் நன்றாகப் படம் பிடித்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே, உங்களுடைய மனசாட்சிப்படியும் ஒரு நல்ல தீர்ப்பினை நீங்கள் வழங்க வேண்டும். மீண்டும், மீண்டும் நீங்கள் சபையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பீர்களானால், இங்கே சில பிரச்சினைகள் மீண்டும் உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதனை, சட்டப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 18

*பேரவைத் தலைவர் அவர்கள் தவிர்க்க வேண்டும். ஒரு நல்ல தீர்ப்பை வழங்குங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்ல வேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு நீங்கள் வாருங்கள். சபையைக் கூட்டுங்கள். நீங்கள் என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதற்கு நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருகிறோம். அதை விடுத்து, மறுபடியும், மறுபடியும் முதலிலேயே இவ்வளவு பிரச்சினைகள் நடந்ததற்குப் பிறகும், அதைத் தொடருவது என்பது ஜனநாயகத்திற்கு உகந்ததுதானா என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பிற்கே நான் விட்டுவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் தொடர்ந்து ஒரு கோரிக்கையை வைக்கிறோம். சட்டமன்றத்தை இந்தச் சூழ்நிலையிலே கூட்ட வேண்டாம். இதை ஒத்திவையுங்கள் என்று உங்களிடம் வேண்டுகோள் வைக்கிறோம் அல்லது சட்ட சபையைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், இரகசிய வாக்கெடுப்பு முறையில் அந்த ஓட்டெடுப்பை நடத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையினுடைய முடிவு உங்கள் கையிலேதான் இருக்கிறது. இரண்டு* options *கொடுத்து, நீங்களே முடிவு சொல்லுங்கள் என்றுதான் கேட்டிருக்கிறோம். ஏதாவது ஒன்றை* consider *செய்து, ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு, இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதற்கு சட்டத்திலே வழி இல்லையென்று சொன்னால், கொஞ்சம் கால அவகாசம் கொடுத்து நடத்த வேண்டும் என்பதுதான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய கோரிக்கை. எல்லா எதிர்க்கட்சியினரும் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தயவுகூர்ந்து நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*



2017 பிப்ரவரி 18]

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாம் இப்போது செய்வது அனைத்தும் மக்களுக்காகத்தான். உட்காருங்கள். பேசாமல் உட்காருங்கள். அதாவது நம்முடைய சபை விதி 99(1)–ன்படி இருக்கின்ற விதிகளைத்தான் நான் இந்தச் சபையிலே அமல்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதனை முழுமையாகப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், நீங்கள் எல்லாவற்றையும் படித்திருப்பீர்கள். விதி 99(1) என்ன சொல்கிறதோ, அதன்படிதான் நான் வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று எனக்கு இந்தச் சபை வகுத்துத் தந்த விதி இருக்கின்றது. அந்த விதியை மீறி என்னால் செய்வதற்கு ஒன்றும் இல்லை. ஏற்கெனவே நம்முடைய மரபு என்னவோ அந்த மரபை நான் கடைப்பிடிக்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையிலே நீங்களும் ஆளும் கட்சியாக இருந்து, இதுபோன்ற தீர்மானங்களையெல்லாம் கொண்டுவந்தபோது, என்ன முறையை இந்தச் சபையிலே பின்பற்றினீர்களோ, அதே முறையைத்தான் நான் பின்பற்றுகிறேன். ஆகவே எனக்கு இருக்கிற ஒரே* option, division*–க்கு விடுவதைத் தவிர, வேறு வழி இல்லை. நான்* division*–க்கு விடுவதைத் தவிர, வேறு வழி இல்லை. எனக்கு விதி அதைத்தான் சொல்கிறது. ஆகவே,* division*–க்கு விடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.*

**திரு. மு.க ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 122–ன்படி “பேரவையின் ஒழுங்கும், அமைதியும் மிகப் பெருமளவிற்குச் சீர்குலையுமானால், பேரவைத் தலைவர் ஒரு கூட்டத்தை பேரவை அடுத்துக் கூடும் நாளுக்கு ஒத்திவைக்கவோ அல்லது அதே நாளில் ஒரு குறிப்பிட்ட நேரம்வரை நிறுத்திவைக்கவோ செய்யலாம்” என்று இருக்கிறது. எனவே, நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் ஏற்கெனவே சொன்னீர்கள், இரகசிய வாக்கெடுப்பு நடத்த விதிமுறையில் இடம் இல்லை. ஆக, ஒத்திவைப்பதற்கு விதியில் இடம் இருக்கின்றது. இதைத்தான் உங்களிடத்திலே நாங்கள் வலியுறுத்துகின்றோம். எனவே, தயவுகூர்ந்து இந்த விதிமுறையைக் கடைப்பிடித்து, உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, நீங்கள் சபையை ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைத்து, அதற்குப் பிறகு இந்த வாக்கெடுப்பு நடத்தும் விஷயத்தில், இந்த அவை ஈடுபட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

[2017 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாடாளுமன்றத்தில் இருப்பது போன்ற மரபு இங்கே இல்லை. சபையை அடிக்கடி ஒத்தி வைக்கும் முறை இங்கு இல்லை. (குறுக்கீடுகள்) ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை மட்டும் அலுவல் நேரத்தில் எடுத்துக்கொண்டு, நடத்துவது என்பது முறையாக இருக்கின்றது. ஒரு சம்பவம் நடந்ததால், நான் சபையை ஒரு மணி நேரம் ஒத்தி வைத்து, மீண்டும் நாம் கூடியிருக்கிறோம். இதற்கு மேல் அவையை என்னால் ஒத்திவைக்க இயலாது. நான் இப்போது அரசினர் தீர்மானத்திற்குப் போகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குறுக்கிட்டனர்.)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவைமீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது"*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்தனர்.)*

*(திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், திரு. சு. புகழேந்தி, திரு. க. கார்த்திகேயன், திரு. எஸ். ஆஸ்டின் மற்றும் சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமர்ந்துள்ள பிளாக் 1 மற்றும் பிளாக் 2–க்கும் இடையே வந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தயவு செய்து உங்கள் இடத்திற்குப் போங்கள். தயவு செய்து உங்கள் இடத்திற்குப் போங்கள். நான் விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். தயவுசெய்து எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். எனக்கு சபையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையின் முன்பு நின்று கொண்டு அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்தனர்.)*



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

*நான் எச்சரிக்கின்றேன், எச்சரிக்கின்றேன். விதிகளின்படி எச்சரிக்கின்றேன். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன்.*

*(அவைக் காவலர்கள் உள்ளே வராமல் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் தடுத்து நிறுத்தினார்.)*

*அனைவரையும் வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரையும் வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை வெளியேற்றும்படி நான் உத்தரவிடுகிறேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கையின் அருகே உள்ள மேடையின்மீது நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)*

*(சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களின் மேசைமீது ஏறி நின்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், திரு. எஸ். அம்பேத்குமார், திரு. ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் கோஷமிட்டனர்.)*

*பிற்பகல் 1–15*

*(பேரவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்ற முற்படுகையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று 'ஒத்தி வை, ஒத்தி வை' என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புத்தகங்களைக் கிழித்து வீசினர்.)*

*(திரு. துரைமுருகன், திரு. இ. பெரியசாமி, திரு. எ.வ. வேலு, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. வி.ஜி. ராஜேந்திரன், திரு. எஸ். அம்பேத்குமார் உள்ளிட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கைமீது ஏறி நின்று 'ஒத்தி வை ஒத்தி வை' என்று கோஷமிட்டனர்.)*

[2017 பிப்ரவரி 18

*(பேரவைத் தலைவர் முன்பு உள்ள செயலாளர் மேசைமீது ஏறி நின்று கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன் மற்றும் திரு. த. மனோ தங்கராஜ் ஆகியோர் பேரவைத் தலைவரை நோக்கி கூச்சலிட்டனர்.)*

*(மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அருகில் மேசைமீது ஏறி நின்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் கூச்சலிட்டார்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்போது அவர்கள் பேரவைக் காவலர்களைத் தள்ளி வெளியேற மறுத்தனர்.)*

*(பேரவைச் செயலாளரின் மேசை மற்றும் இருக்கைகள் கீழே தள்ளப்பட்டன.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கை முன் அமர்ந்து வெளியேற மறுத்தனர்.)*

*பிற்பகல் 1–20*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் முன் மேசைமீது ஏறி நின்று பேரவைக் காவலர்களுடன் கடும் வாக்குவாதத்திலும், ரகளையிலும் ஈடுபட்டார்.)*

*(திரு. வாகை சந்திரசேகர் வெளியேற மறுத்து பேரவைக் காவலரைத் தள்ளினார்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று 'ஒத்தி வை, ஒத்தி வை' என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று 'போலீஸ் அராஜகம் ஒழிக' என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(தண்ணீர் பாக்கெட் ஒன்று எதிர்க்கட்சி வரிசையிலிருந்து தூக்கி வீசப்பட்டது.)*



2017 பிப்ரவரி 18]

*(தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டது.)*

*(மைக்குகள் உடைக்கப்பட்டன.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து வெளியேற மறுத்து பேரவைக் காவலர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, கோஷங்கள் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.)*

*(திரு. இ. கருணாநிதி, அமைச்சர் மேசையின்மீது ஏறி நின்று, வெளியேற மறுத்து பேரவைக் காவலருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, ரகளையும் செய்தார்.)*

*(திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் வெளியேற மறுத்ததுடன் பேரவைக் காவலர்களுடன் கடும் ரகளையில் ஈடுபட்டபோது காவலர் ஒருவரின் தொப்பியை தட்டிவிட்டார்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று* 'speaker down down' *என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று 'காப்பாற்று, காப்பாற்று, ஜனநாயகத்தை காப்பாற்று' என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை சூழ்ந்து நின்று 'ஒத்தி வை, ஒத்தி வை, சபையை ஒரு வாரம் ஒத்தி வை' என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் திரு. செ. ஸ்டாலின் குமார் ஆகியோர் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

*பிற்பகல் 1–25*

*(திரு. ஐ.பி. செந்தில்குமார், பேரவைக் காவலர்களுடன் ரகளையில் ஈடுபட்டு வெளியேற மறுத்தார். பேரவைக் காவலரைத் தள்ளினார்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷங்களை எழுப்பி ரகளையில் ஈடுபட்டனர்.)*

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேற மறுத்து பேரவைக் காவலர்களுடன் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு ரகளை செய்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், "ஒத்தி வை, ஒத்தி வை, பேரவையை ஒரு வாரம் ஒத்தி வை"; "காப்பாற்று, காப்பாற்று ஜனநாயகத்தைக் காப்பாற்று"; "போலீஸ் அராஜகம் ஒழிக, காவல் துறை அராஜகம் ஒழிக" என்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் பிற்பகல் 3–00 மணிக்குக் கூடும்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 3–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேச நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேனே! மீண்டும், மீண்டும் பேச வாய்ப்புக் கேட்டால் எப்படி? தயவுசெய்து என்னை அவையை நடத்தவிடுங்கள். உங்களுக்கு எல்லா rules–ம் தெரியும். நீங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்திருப்பீர்கள். சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்பாக, இங்கு நடைபெற்ற அசாதாரண சூழ்நிலையை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தவிர்த்திருக்கலாம். இரண்டே இரண்டு options–தான் சொன்னோம். ஒன்று, சட்டமன்றத்தை ஒரு வாரத்திற்குத் தள்ளி வைத்து நடத்துவது; மற்றொன்று, இரகசிய வாக்கெடுப்பு நடத்துவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கோரிக்கைகளை நான் பரிசீலித்தேன். அதிலே. . . (குறுக்கீடு)



2017 பிப்ரவரி 18]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எல்லாம் முடிந்துவிட்டது. அவர்களெல்லாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை விதிகளில் என்ன இருக்கிறதோ, அதைத்தான் நான் செயல்படுத்துகிறேன். அவை விதிகளுக்குப் புறம்பாக நான் ஒன்றும் செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விவரம் தெரிந்தவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே மற்ற மாநிலங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். அவ்வளவுதான், இதற்குமேல் எதுவும் விவாதம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன். மீண்டும், மீண்டும் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருக்காதீர்கள். தயவுசெய்து வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். மீண்டும், மீண்டும் அதைப் பற்றியே பேசவேண்டாம்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்பு நமது பேரவையிலே விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்தன. அதிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் காயம்பட்டிருக்கிறார்கள்; இந்த நிலை தவிர்த்திருக்கப்பட வேண்டிய நிலை. உங்களிடம் நாங்கள் இரண்டு வேண்டுகோள்களை வைத்தோம். இரண்டு வேண்டுகோள்களையும் நீங்கள் நிராகரித்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். ஒன்று, இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொன்னோம். மற்றொன்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி அவர்களே, உங்களுடைய கோரிக்கைகளை நிறைய சொல்லிவிட்டீர்கள். நான் அதையெல்லாம் பரிசீலித்தேன். அவை விதிகளில் என்ன இருக்கிறதோ, அதைத்தான் நான் செயல்படுத்துகிறேன். தயவுசெய்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், தயவுசெய்து உட்காருங்கள். திரு. அபூபக்கர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, சொல்லுங்கள்; நீங்களே பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

**திரு. கரி. இராமசாமி:** அடுத்தபடியாக இரகசிய வாக்கெடுப்பு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் இல்லையென்று சொல்லிவிட்டேனே! அதைவிடுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** என்னை சொல்லவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை எவ்வளவு நேரம் பொறுமை காக்கச் சொல்கிறீர்கள்?

**திரு. கரி. இராமசாமி:** எங்களால் தவறு ஏற்பட்டது என்று சொல்லுங்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எங்கள்மீது தவறு இல்லை. நாங்கள் தவறு செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, என்னை அவையை நடத்தவிடுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் காயங்கள் ஏற்படக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் காலையிலேயே சொல்லிவிட்டேன். சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால், என்னிடத்தில் முறையான அறிவிப்பு வரும் என்றால், அதை நான் விசாரித்து, தக்க நடவடிக்கை எடுத்து, உறுப்பினர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கிறேன் என்ற உறுதியைத் தந்திருக்கிறேன். அதன்படி, நிச்சயம் நான் நடந்துகொள்வேன்.

**திரு. கரி. இராமசாமி:** பாதுகாப்பு சட்டமன்றத்தில் இல்லை என்றுதான் உங்களிடம் சொல்கிறோம். சட்டமன்றத்திலேயே பாதுகாப்பு இல்லை, இதுதான் அதிலுள்ள பிரச்சினை. சட்டமன்றத்திலே பாதுகாப்பு இல்லை என்றுதான் உங்களிடம் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கே இங்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டதை நீங்கள்தான் கண்கூடாகப் பார்த்தீர்களே! நீங்கள்தான் witness. என்னுடைய அறைக்கு வந்து ஒத்துக்கொள்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, சொல்வதைக் கேளுங்கள். என்னுடைய அறையில் வந்து பேசும்போது, எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிறீர்கள்; அவர்கள் செய்வது தவறு என்று சொல்கிறீர்கள். அவைக்கு வந்தால், நீங்கள் மாற்றிப் பேசுகிறீர்கள். நான் என்ன செய்ய முடியும்? உங்களைப் போன்று, நான் செய்ய முடியாது. நீங்கள் சொல்கிற மாதிரியெல்லாம் நான் செய்ய முடியாது. எனக்கு விதி இருக்கிறது; அந்த விதிப்படிதான் நடக்க முடியும்.





**திரு. கரி. இராமசாமி:** நீங்கள் இதற்கு அத்தாட்சி வேண்டும் என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு முன்னாடி இருக்கின்ற இன்றைய சட்டமன்றத்தினுடைய நிலைமைதான் இதற்கு அத்தாட்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, தயவுசெய்து உட்காருங்கள். போதும், அவ்வளவுதான் இத்துடன் விவாதத்தை முடித்துக்கொள்ளுங்கள். விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) திரு. அபூபக்கர், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, நீங்கள் எவ்வளவு நேரம்தான் பேசுவீர்கள்?

பிற்பகல் 3–05

**திரு. கரி. இராமசாமி:** பேசுவதற்கு என்ன இருக்கிறது? இங்கே நடந்த அசம்பாவிதங்களைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றத்தினுடைய நிகழ்வுகள் எல்லாம் மிகவும் மன வேதனையளிக்கக்கூடிய வகையிலே நடைபெற்றுள்ளன. நாங்களும் உங்களை சில முறை வந்து, எதிர்க்கட்சிகளுடைய கோரிக்கைகளையாவது நீங்கள் பரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னோம். நீங்கள் அதற்கு எந்த வகையிலும் இடம் கொடுக்காத நிலையிலே, தொடர்ந்து பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் மற்றும் அனைவரும் தாக்கப்பட்டு அவர்களெல்லாம் வெளியேற்றப்பட்ட நிலையில் வாக்கெடுப்பிலே பங்கேற்பது எந்த

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 பிப்ரவரி 18

வகையிலும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தாது என்ற கருத்தின் அடிப்படையில் அந்த நிகழ்ச்சியை கண்டித்து நான் வெளிநடப்புச் செய்கின்றேன்.

*(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அபூபக்கர், நீங்கள் எனது அறையில் வந்து பேசுவது ஒன்று. எல்லாம் தவறு என்று சொல்கிறீர்கள். அவர்கள் செய்தது எல்லாம் தவறு என்று சொன்னீர்கள். இப்போது மாற்றி பேசுகின்றீர்கள். அது மாதிரி நான் செய்ய முடியாது. நான் விதிப்படிதான் செய்வேன். எனக்கு விதிதான் முக்கியம்.

*பிற்பகல் 3—10/3—15*

அரசினர் தீர்மானத்தின்மீது இப்போது வாக்கெடுப்பு.

*(அழைப்பு மணி ஒலிக்கப்பெற்றது.)*

கொஞ்சம் இருங்கள். நான் சொல்கிறேன். நான் சொல்வதற்குமுன் ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 99—ன்கீழ், ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இருமுறைகளில் வாக்கெடுப்பு. அதாவது குரல் வாக்கெடுப்பு அல்லது எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென விதிகளில் உள்ளது. விதி 99(1)—ன்கீழ், இத்தீர்மானத்தை நிறைவேற்ற குரல் வாக்கெடுப்பு நடத்தப்படலாம். எனினும், தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் கருதியும், இதுபோன்ற முன்நிகழ்வுகள் ஏற்கெனவே சட்டமன்றங்களில் கடைப்பிடிக்கப்படும் வாக்கெடுப்பு முறையினையும், விதி 99(3)—ல் குறிப்பிட்டுள்ளவாறும், எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்த முனைகிறேன். பேரவை விதி 99(3)—ல் குறிப்பிட்டுள்ளவாறு, தற்போது அவைமுன் உள்ள தீர்மானம் எண்ணிக் கணிக்கும் முறைப்படி வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பேரவைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை, அதாவது Quorum Bell-ஐ மூன்று முறை ஒலிக்கச் செய்வார்கள். அழைப்பு மணியை அழுத்துமாறு செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*(அழைப்பு மணி மூன்று முறை ஒலிக்கப்பெற்றது.)*



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். பேரவையின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டனவா?

*(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)*

வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவருக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையிலே அமர்ந்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலிருந்து வெளியே செல்லவோ, இன்னொருவர் இருக்கைக்குச் செல்லவோ கூடாது. வாக்கெடுப்பு முடியும்வரை அவரவர் இருக்கையிலே இருக்க வேண்டும்.

நம்முடைய பேரவை 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் வாக்கெடுப்பு நடத்த உள்ளேன். பேரவை விதி 99 உள்விதி (5)—ன்கீழ் தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், தீர்மானத்தை எதிர்ப்போர் 'இல்லை' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், நடுநிலை வகிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் தனித்தனியே பகுதி வாரியாக, blockwise எழுந்து நிற்குமாறு அழைப்பேன். அவ்வாறு எழுந்து நின்றவர்களின் பெயர்கள், ஒவ்வொருவராக செயலாளர் அவர்களால் பெயர்கள் படிக்கப்பெற்றப் பின்னர், பெயர் படிக்கப்பெற்ற அந்தக் குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் தனது இருக்கையிலே அமர்ந்துகொள்ளலாம்.

பேரவைமுன் உள்ள கேள்வி

"திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவைமீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இத்தீர்மானத்தை அவையினுடைய முடிவிற்கு விடுகின்றேன்.

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

**பகுதி–1**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி
2. மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்
3. மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு
4. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு
5. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்
6. மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
7. திரு. சு. ராஜேந்திரன்
8. திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
9. திரு. இரா. குமரகுரு
10. திரு. மு. கோதண்டபாணி
11. திரு. மா. கோவிந்தராசு
12. திரு. மு. சக்ரபாணி
13. திரு. ஆர். தங்கதுரை
14. திரு. ரா. தமிழ்ச்செல்வன்
15. திரு. கே.எஸ். தென்னரசு
16. திரு. வி. பன்னீர்செல்வம்
17. திரு. ஏ.கே. போஸ்
18. திரு. கே.ஏ. பாண்டியன்
19. திரு. என்.ஜி. பார்த்திபன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

1. திரு. S. செம்மலை
2. திரு. ஆர். நடராஜ்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

**பகுதி–2**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

20. மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்
21. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்
22. மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு
23. மாண்புமிகு திரு. பி. தங்கமணி
24. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி
25. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்
26. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்
27. மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்
28. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி
29. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி
30. மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்
31. மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்
32. மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்
33. மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்
34. திரு. வீ. அலெக்சாண்டர்
35. திரு. பா. ஆறுமுகம்

36. திரு. ஏ. இரத்தினசபாபதி

37. திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்

38. திரு. கே.வி. இராமலிங்கம்

39. திரு. சி.வி. இராஜேந்திரன்

40. திரு. எ.பி. சக்திவேல்

41. திரு. அ. சண்முகம்

42. திரு. ப. சத்திய நாராயணன்

43. திரு. இரா. சந்திரசேகர்

44. திரு. சி. சந்திரசேகரன்

45. திரு. வே.பொ. சிவசுப்பிரமணி

46. திரு. ஆர்.எம். சின்னதம்பி

47. திருமதி கு. உமா மகேஸ்வரி

48. திருமதி வி. கஸ்தூரி வாசு

49. திருமதி ம. கீதா

50. திருமதி ப. சத்யா

51. திருமதி மு. சந்திரபிரபா

52. திருமதி பொன். சரஸ்வதி

53. திருமதி கு. சித்ரா

54. திருமதி மு. பரமேஸ்வரி

55. திரு. பி.வி. பாரதி

56. திரு. ஆர். பாலசுப்பிரமணி

57. திரு. கே.பி.பி. பாஸ்கர்

58. திரு. அ. பிரபு

59. திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்





60. திரு. அ மருதமுத்து

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

3. திரு. வி.சி. ஆறுக்குட்டி

4. திரு. எஸ்.எஸ். சரவணன்

5. திரு. அ. மனோகரன்

6. திரு. கி. மாணிக்கம்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

## பகுதி–3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

61. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்

62. மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா

63. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்

64. மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்

65. மாண்புமிகு திரு. இரா. காமராஜ்

66. மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்

67. மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்

68. மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி

69. மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்

70. மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்

71. மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி

72. மாண்புமிகு திரு. ப. பாலகிருஷ்ணா ரெட்டி

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

73. திரு. ஐ.எஸ். இன்பதுரை

74. திரு. எஸ். ஈஸ்வரன்

75. திரு. டி.எ. ஏழுமலை

76. டாக்டர் கா. கதிர்காமு

77. திரு. V.T. கலைச்செல்வன்

78. திரு. ஆர். கனகராஜ்

79. திரு. சு. குணசேகரன்

80. திரு. ஆர். சுந்தரராஜ்

81. திரு. எஸ்.ஜி. சுப்பிரமணியன்

82. திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்

83. திரு. எம். செல்வராசு

84. திரு. C.V. சேகர்

85. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

86. திரு. அ. நடராஜன்

87. திரு. பி.எம். நரசிம்மன்

88. திரு. பா. நீதிபதி

89. டாக்டர் V.P.B. பரமசிவம்

90. திரு. ப. பலராமன்

91. திரு. எஸ். பவுன்ராஜ்

92. திரு. கே. பழனி

93. திரு. பெ. பழனியப்பன்

94. திரு. சோ. மாரியப்பன் கென்னடி

95. திரு. எஸ். முத்தையா

96. திரு. ஆர். முருகன்



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

97. திரு. என். முருகுமாறன்

98. திரு. ஆர். முருகையா பாண்டியன்

99. திரு. தூசி கே. மோகன்

100. திரு. சு. ரவி

101. திரு. வி. ராதாகிருஷ்ணன்

102. திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்

103. திரு. அ. ராமு

104. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

105. திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்

106. திரு. சி. ராஜா

107. திரு. கோ. லோகநாதன்

108. திரு. விருகை V.N. ரவி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

7. திரு. ஓ. பன்னீர்செல்வம்

8. திரு. எஸ்.பி. சண்முகநாதன்

9. திரு. க. பாண்டியராஜன்

10. திரு. ஓ.கே. சின்னராஜ்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– எவருமில்லை –

**பகுதி–4**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

109. திரு. சே. கருணாஸ்

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 18

110. திரு. உ. தனியரசு

111. திரு. எம். தமிமுன் அன்சாரி

112. திரு. க.நா. விஜயகுமார்

113. திரு. கே.எஸ். விஜியகுமார்

114. திரு. என்.டி. வெங்கடாச்சலம்

115. திரு. கோ. வெங்கடாஜலம்

116. திருமதி ப. மனோன்மணி

117. திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

118. திரு. எம். ரெங்கசாமி

119. திரு. V. செந்தில்பாலாஜி

120. திரு. ச. வெற்றிவேல்

121. திரு. P. வெற்றிவேல்

122. திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்

*தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

11. திருமதி நா. மனோரஞ்சிதம்

*தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

– எவருமில்லை –

**பகுதி–5**

– எவருமில்லை –

**பகுதி–6**

– எவருமில்லை –

“திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவைமீது இப்பேரவை தனது நம்பிக்கையைத்



2017 பிப்ரவரி 18] [பேரவைத் தலைவர்]

தெரிவிக்கிறது” என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பட்டன.

தீர்மானத்தை ஆதரித்தோர் – 122 *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

தீர்மானத்தை எதிர்த்தோர் – 11

நடுநிலை வகித்தோர் – எவருமில்லை

தீர்மானத்தை ஆதரித்தோர் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் நிறைவேறியது; வெற்றி பெற்றது. *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் வெற்றி பெற்றது என பேரவைக்கு அறிவிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 3–20*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து சிறப்பாக நடைபெற *(மேசையைத் தட்டும் ஒலி)* எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு காலையிலே நடைபெற்ற சம்பவங்களை நான் மீண்டும் நினைத்துப் பார்க்க விரும்பவில்லை என்றாலும், பாரம்பரியமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் அதுகுறித்து எனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பாவிட்டாலும், நான் அதை மறந்து விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்திலே ‘நான் நீலிக் கண்ணீர் வடித்ததாக’, வெளியிலே பேட்டி கொடுத்ததால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேட்டி கொடுத்திருக்கிற காரணத்தினாலே, எனது மனது மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தினால் ஒரு சிலவற்றை மட்டும் வேதனையுடன் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இதைத் தெரிவிப்பதிலே நான் மிகவும் வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன். மிக, மிக தாழ்த்தப்பட்ட, சாமானிய எளிய குடும்பத்தில் பிறந்த என்னை, பள்ளத்திலிருந்து கைகொடுத்துத் தூக்கிவிடுகிற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் இந்த பதவியிலே அமர்த்தப்பட்டேன். தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் அமர்த்தப்பட்டேன். சுதந்திர இந்தியாவிலே ஒரு தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த எளியவனை மிக உயர்ந்த இந்தப் பதவியிலே அமர்த்தி நான் சார்ந்துள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு எளிய சமூகத்திலிருந்து வந்த நான் அவை விதிகளுக்கு கட்டுப்பட்டு ஜனநாயக முறையில் மரபுகளைப் பின்பற்றி இந்தப் பேரவையை நடத்திய காரணத்தினால்தான் மீண்டும் இந்த வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே தி.மு.க. உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலே என்மீது தாக்குதல்களை நடத்தியிருந்தால்கூட நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். பேரவைத் தலைவர் என்ற முறையிலே நான் பணியாற்றுகையில் அந்தப் பதவிக்கும் மரியாதை தராமல் நான் சார்ந்துள்ள சமூகத்தை இழிவுபடுத்துகின்ற முறையில் இங்கே நடந்துகொண்டது அவர்கள் திட்டமிட்டு அரங்கேற்றிய ஒரு நாடகமாகவே நான் கருதுகிறேன்.

ஒடுக்கப்பட்ட ஆதி திராவிட சமுதாய இன மக்களை அடக்கிவிடலாம், இந்த சமூகம் வளரக் கூடாது என நினைத்து தி.மு.க.–வினர் இங்கே செயல்பட்டிருப்பார்களேயானால், உண்மையிலேயே நான் சார்ந்துள்ள சமூகத்தின் சார்பாக திரு. ப. தனபால் என்ற தனி மனிதன் அதனை என்றென்றும் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக இப்போது என்னுடைய மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுதந்திரம் பெற்று 69 ஆண்டுகள் ஆனபின்பும் இந்தச் சமூகம் முன்னுக்கு வரக் கூடாது, இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த எவரும் உயர் பதவியில் இருக்கக் கூடாது என்ற எண்ண ஓட்டத்தின் வெளிப்பாடே இங்கே நடைபெற்ற குழப்பம் என நான் கருதுகிறேன்.

பிற்பகல் 3–25

இந்தத் தீர்மானத்தை எடுத்து வருவதற்கு முன்பே, திட்டமிட்டு அவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்கு அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் எண்ணப்படியே அவைக்குக் குந்தகம் விளைவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அவையிலே இருக்கும்போதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அதன் தொடர்ச்சியாகவே இப்போது வாக்கெடுப்பு நடைபெற்று





முடிவடைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்து, இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தாலும், இப்போது வெளியேறிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மற்றவர்களும் எதிர்த்து வாக்களித்திருந்தாலும், இன்றையதினம் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள் 88 பேர்தான்; மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்களைச் சேர்த்தாலும், இந்த நிலையில்—தற்போது இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 122 உறுப்பினர்கள் வாக்களித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்கள் அத்தனைபேரும் இருந்து இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தாலும் இந்தத் தீர்மானம் வெற்றி பெற்றதாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது பதிவான இந்த வாக்குகள் நாட்டிற்குத் தெளிவாகத் தெரிவிக்கிறது. ஆகவே, மற்ற விவரங்களெல்லாம்—அவர்கள் செய்கிற அரசியலுக்கும் எனக்கும் பொறுப்பில்லை.

நான் விதிகளின்படிதான் இந்தச் சபையை நடத்தியிருக்கிறேன். இன்றைக்கு விதிகளின்படிதான், சட்டமன்ற விதிகளில் இருக்கின்ற அந்த விதிகளைப் பயன்படுத்தித்தான் வாக்கெடுப்பை நடத்தியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்கெடுப்பிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானம் இன்றைக்கு 122 வாக்குகளைப் பெற்று முழு வெற்றியைப் பெற்றிருக்கிறது. ஆகவே, இதன்மூலம் அறுதிப் பெரும்பான்மையை இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் என்னுடைய மன ஆதங்கமாகத்தான் இங்கே வெளியிட்டிருக்கிறேன். இன்றைக்குச் சபையில் நடைபெற்ற அத்தனை விவரங்களையும் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றனர். ஆகவே, இந்த அவையிலே பேரவைத் தலைவரை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ, அவ்வளவு கேவலமாக அந்த உறுப்பினர்கள் நடத்தியிருக்கிறார்கள். நான் மறந்துவிட வேண்டுமென்று நினைத்தாலும், வெளியிலே சென்று பேட்டி கொடுத்திருக்கிறார்கள். நான் எதுவும் பேசக்கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால், அவர்கள் அதுகுறித்து பேட்டி கொடுத்து, என்னைப் பேச வைத்துவிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து இதோடு இந்தப் பிரச்சினையை முடித்துவிடுகிறேன்.

[2017 *பிப்ரவரி* 18

## (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“பேரவை விதி 25(1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 3–29 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

********